1980 பிப்ரவரி 6]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, செலவுபற்றிய குறிப்பு தற்போது கைவசம் இல்லை.

திரு. ந. தனசேகரன்; பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்கள் பதிலில் அங்கு ஒரு குழு அமைக்கப் பட்டதாகவும், அது பல நேரங்களில் கூடி பல முடிவுகளை எடுத்ததாகவும் சொன்னார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடிய ஒரே சட்டமன்ற உறுப்பினர்கூட அந்தக் குழுவில் இடம் பெறவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்கு, அரசு முயற்சி செய்ய முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்); தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் தவிர வர்த்தகத் துறை பிரமுகர்களும் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் திருச்சிராப்பள்ளி பேருந்து வழித்தடம்.

*வினா எண். 74— திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலத்திற்கும் திருச்சிக்குமிடையே இரவு நேரங்களில் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஆம்.

திரு. கா. செங்கோடன்: சேலத்திலிருந்து திருச்சிக்கு குறிப் பாக இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரையில் அரசு பஸ்கள் இல்லை. இதனால் அங்கு பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரை அதிக பஸ்கள் விட முன்வருவார்களா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஏற்கெனவே சேலத்திலிருந்து திருச்சிக்கு மூன்று இரவு நேர பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அண்ணா போக்கு வரத்துக் கழகம் அதை நடத்தி வருகிறது. மேலும் இரண்டு பேருந்துகளை சேலத்திலிருந்து திருச்சிக்கு விட ஏற்பாடு நடந்து வருகிறது.